REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 13௳ சனி (28—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 14௳ ஞாயிறு (29—12—57) [இதழ் 169

சிறைகள் மருத்துவமனைகள்—கைதிகளே நோயாளிகள்!

திருவனந்தபுரம், டிச. 27—

"சிறைகள் மருத்துவ மனைகள்; கைதிகளே நோயாளிகள்—அதிகாரிகள்தான் டாக்டர்கள்" என்று, கேரள சட்ட மந்திரி, மாநில சிறை அதிகாரிகள் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"சிறைகளை மருத்துவமனைகளாகவும், கைதிகளை நோயாளிகளாகவும் நீங்கள் கொண்டால், கைதிகளை நடத்தும் உங்கள் போக்கில் ஒரு அடிப்படையான மாற்றம் ஏற்படவேண்டும்" என்றும் அவர் அதிகாரிகளுக்குக் கூறியிருக்கிறார்.

குமரி எல்லையில் விடுதலை வீரர்கள் அணிவகுப்பு

நாகர்கோவில் பூண்டிருக்கும் விழாக் கோலம்—வீதியெல்லாம் கழகமுழக்கம்

நகரைக் குலுக்கிய இரு மைல் நீள ஊர்வலம்

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு விவரங்கள்

(டிரங்க் டெலிபோன் மூலம்)

நாகர்கோவில், டிச. 27—

நாஞ்சில் மாவட்ட தி. மு கழக இரண்டாவது மாநாடு இன்று காலை கலைவாணர் பந்தலில்—கே. வி. கே. சாமி அரங்கில் துவங்கியது.

'தென்னகத்தின் எல்லை' என்ற சிறப்பிற்குரிய குமரியின் எழிலும், மலைகள் வரையாது வழங்கும் வளமும் மிக்க நாஞ்சில் மாவட்டத்தின் கழக வீரர்கள், மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் அணிவகுத்து நிற்கின்றனர்.

தாய்த் தமிழகத்துடன்—அண்மையில்தான் இணைந்துவிட்ட மகிழ்ச்சியும், தாயகத்தின் அடிமை நிலைதரும் கவலையும், 'தாயகத்தை வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து மீட்டே தீருவோம்' என்ற உறுதியும் அவர்களது வீரநடையில் காணத்தக்கவராயிருக்கின்றன.

விழாக் கோலம பூண்டிருந்த நாகர்கோவில், மாநாட்டிற்கு வருகைதரும் கழக முன்னணி வீரர்களையும், திரும்புமிடமெல்லாம் வளைவுகள் தாங்கி நின்று வரவேற்கின்றன.

மாவட்ட மக்களிடை புத்தெழுச்சி மலரவும் ஆர்வம் தழைக்கவுமே மாநாடு, வெற்றியை அருகிக்கொண்டிருக்கிறது.

மாபெரும் ஊர்வலம்

மாவட்டக் கழக அலுவலகத்திலிருந்து பிரும்மாண்டமானதோர் ஊர்வலம்—மாவட்டக் கழக வீரர்களின் அணிவகுப்பு காலை 10 மணி அளவில் புறப்பட்டது.

மாநாட்டுத் தலைவர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி, திறப்பாளர் டாக்டர் ஏ. அருணாசலம், வரவேற்புத் தலைவர் தோழர் கி. மனோகரன் ஆகியோர் ஊர்வலத்தின் நாயகர்களாக விளங்கினர்.

இரு மைல் நீளம் கொண்ட அந்த மாபெரும் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று பந்தலை வந்தடைய பகல் 1 மணியாயிற்று. அலங்கரிக்கப்பட்ட யானைகளும், குதிரைகளும் முன்செல்ல, தொண்டர் படைத் தலைவர்களான எஸ். வி. அப்பன், ஜி. எம். ஷா ஆகிய இருவரும் ஊர்வலத்தை நடத்திச் சென்ற காட்சி கண்கொள்ளாததயிருந்தது.

வழிநெடுக, பல்லாயிரக்கணக்கான மக்கள், கூடிநின்று ஊர்வலத்தினர் முழக்கிய விடுதலை ஒலிகளை எதிரொலித்து ஆரவாரித்தனர்.

மாவட்டத்தின் எல்லாக் கிளைகளின் பிரதிநிதிகளும், கழகக் கொடியேந்தி, கடல் அலையென வரிசை வரிசையாகச் சென்ற மாண்புமிகு காட்சி, ஊர்வலத்திற்குத் தனிச் சிறப்பளித்தது.

பந்தலை அடைந்ததும், மாநாட்டுத் தலைவர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கூடியிருந்தோரின் ஆரவாரப் பேரொலிகளும், வாழ்த்தொலிக்கும் இடையே கம்பீரமாக நின்ற உயர் கம்பத்தில் கழகக் கொடி ஏற்றுவித்தார்.

அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிற்பகல் 4 மணிக்கு, இசை முரசு நாகூர் அனிபாவின் இன்னிசை அரங்கு, கூடியிருந்த மக்களின் விடுதலை உணர்ச்சிக்கு 'சுருதி' கூட்டியது.

பின்னர், மதுரை டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள், வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் கி. மனோகரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மாநாட்டினைத் திறந்துவைத்து அரியதோர் கருத்துரை வழங்கினார்.

பின்னர், வரவேற்புத் தலைவர் கி.மனோகரன் அவர்கள், மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று, நாஞ்சில் மாவட்டத்தில் கழகப் பணிகளை விளக்கி, மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

அவர், மாநாட்டிற்கு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைத் தலைமைதாங்கி நடத்தித் தருமாறு வரவேற்புக் குழு சார்பில் கேட்டுக் கொண்டார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் மதுரை முத்து, பு. பொன்னம்பலனார், நாஞ்சில் அன்பெழில், தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

பின்னர், பலத்த ஆரவாரப் பேரொலிக்கும் மகிழ்ச்சிப் பெருக்கிற்கும் இடையே தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமை ஏற்று, தனக்கே உரியபாணியில், தாயகத்தின் விடுதலைக் கோரிக்கையை முழக்கினர்.

தலைமையுரைக்குப் பிறகு தோழர்கள் சி. பி. சிற்றரசு, ப. உ. சண்முகம் எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்.

பெருமழை தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெறுவதைச் சிறிதுநேரம் தடைப்படுத்திற்று.

பின்னர் இரவு 10-மணிக்கு சுசீந்திரம் தோழியர் லலிதா தமது குழுவினருடன் சிறிது நேரம் நடனம் ஆடினர்.

பின்னர், எழிசை மன்னர் எம். கே. தியாகராச பாகவதரின் இளவல் எம் கே. கோவிந்தராச பாகவதர், தம் குழுவினருடன், குழுமியிருந்தோருக்கு அற்புதமானதோர் இசை விருந்தளித்தார்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இசை, நாட்டிய அரங்குகளில் பங்கு கொண்டோரைப் பாராட்டினர்.

அத்துடன் இரவு 2-30 மணிக்கு முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி இன்று (28-12-57) காலை 10-மணியளவில் துவங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதர விபரங்கள் பின்னர் வெளிவரும்.

பண்டைத் தமிழர் பண்பு கண்டு உலகம் வியந்தது—அன்று!

வாழ்விழந்து வாடும் தமிழரையே உலகம் காண்கின்றது—இன்று!

வளம் எல்லாமிருந்தும் ஒன்றுமில்லாதவராய் நாம் வாழும் இழிநிலை ஏன்?

வடக்கே போடாத திட்டத்திற்குப் பணத்தைக் கொட்டுகின்றனர்; தெற்கே போட்ட திட்டத்தையும் வெட்டுகின்றனர்

நாஞ்சில் மாநாட்டைத் திறந்துவைத்து

டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள் உரிமை முழக்கம்

நாகர்கோவில், டிச. 27—

இன்று காலை இங்கு துவங்கிய நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டை, மதுரை-டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள் துவக்கிவைத்து ஆற்றிய உரை வருமாறு:—

"ஆயிரம் காலால் நடந்து நடந்தமுது
அன்னை பழையாறளிக்கும் நாடு
தீய்வு கரிவறி யாதநாடு—நித்தம்
செல்வம் பொழியும் திருநாடு"

என்று கவிமணியால் சிறப்பிக்கப்பெற்ற பெருமையுடைய நாஞ்சில் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக 2-வது அரசில் மாநாட்டைத் திறந்துவைக்கும் வாய்ப்பினை எனக்களித்த மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவிமணிகளும் கலைமணிகளும் நிறைந்த நாஞ்சில் மாவட்டத்தின் இம்மாநாட்டினைத் திறக்கும் பேறு, பெரும்பேறு என்றே கருதுகிறேன்.

"நாஞ்சில் என்றால் 'ஏர்' என்று பொருள். ஏர் வளம் நிரம்பிய இந்த மாவட்டம், வடநாட்டு மோரியர்களை எதிர்த்த எழினி என்ற மன்னனையும், வள்ளல் நாஞ்சில் வள்ளுவனையும் பெற்ற தொன்மைப்புகழ் வாய்ந்தது.

"அண்மைப் புகழிலும் அது குறைந்ததல்ல; மக்களின் உள்ளத்தே மறைந்துகிடந்த அறியாமை இருளை-கலை எனும் ஒளியால் அகற்றிவரும், கேட்டாலும் பார்த்தாலும் நினைத்தாலும் ஏற்படும் நகைச்சுவையால் மக்களின் மனதில் புதுமைக் கருத்துக்களை புகுத்தியவருமாவார் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள். அந்த ஈடுஇணையில்லா நகைச்சுவை அரசனையும் இந்த மண்தான் நமக்குத் தந்தது இப்பொழுது நம்முடனிருந்து நமக்குத் தெவிட்டாத கலைவிருந்தளித்து மக்களின் ஆர்வத்தையும் [illegible] வாழவேண்டியவர் இயற்கையின் கொடுமையால் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டாலும் இந்த நாழிகையில் [illegible] அவரை நினையாமலிருக்க முடியாது.

"பண்டைத் தமிழர்களின் [illegible] நாகரீகம் வீரம், கலை, பண்பு, [illegible] வாணிபம் இவைகளைக் கண்டு உலகமே வியந்தது. முடியுடை மூவேந்தர்கள் [illegible] அலை பிளந்து மலை கடந்து [illegible] வெற்றிகளை நிலைநாட்டினார் என்பதற்குச் சங்க நூல்கள் சான்று தருகின்றன. தமிழகத்து முத்தும் மிளகும், அகிலும் துகிலும், பட்டும் பவளமும் வெளிநாட்டுச் செல்வங்களைத் தமிழகத்தில் குவித்தனவென்பதைச் சரித்திரம் கூறுகிறது. அவ்வளவு சீரும் சிறப்பும், பெரும் புகழும்பெற்று வாழ்ந்த தமிழர்கள், இன்று வளமிழந்து வலிவிழந்து வறுமையில் வாடுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

"நெல் விளைகிறது-தஞ்சையில்! இரும்பு கிடைக்கிறது-சேலத்தில்! கரும்பு விளைகிறது-தென் ஆற்காட்டில்! நிலக்கரி கிடைக்கிறது-நெய்வேலியில்! எண்ணெய் கிடைக்குமென கருதப்படுகிறது — காவிரிக் கரையில்! எல்லாமிருந்தும், ஒன்றுமில்லாதவர்களாயிருக்கிறார்கள் தமிழர்கள். வளம் பல பெற்றும் வாழ வழியற்றிருக்கிறார்கள். இந்த இழிநிலைக்குக் காரணம் யார்?

"ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் வடக்கையும் தெற்கையும் இணைத்து, அகில இந்தியாவை உருவாக்கி, டில்லியை அதிகார பீடமாக்கினர். அகில இந்தியா உருவானபின் தான் தமிழரின் வாழ்வு நலி[illegible]தது. வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறிய போது த[illegible]ங்கள் அமைத்த ஆட்சி பீடத்தை வடவரிடம் விட்டுச் சென்றனர். 'ஏக இந்தியா' என்று மிரட்டிக் [illegible]கொண்டு 'ஒற்றுமை?' என்று பசப்பிக்கொண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—12—57 சனி

ஊழல்கள் ஒழிய...!

இந்தியத் துணைக் கண்டத்தைத் திறம்பட ஆளும் தகுதியும், திறமையும் பெற்றவர்கள் இன்றைய ஆட்சியாளர்தாம் என்றுகூறி, மாற்றாரைப் பார்த்து எள்ளிநகையாடும் விதண்டாவாதப் பேர்வழிகளுக்கே இன்றைய ஆட்சியாளரின் நிலை வெளிப்படையாகத் தோற்றமளித்து வருகிறது.

இரண்டாவது திட்டத்தைக் காட்டியும், ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மக்களிடம் இருந்த மதிப்பைக் காட்டியும், இன்று பதவியில் அமர்ந்துள்ளவர்கள் அடிக்கடி பெருங்குற்றங்களைப் புரிந்துவருவதை நாம் காண்கிறோம்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் நாட்டில் சரிவர இயங்கவில்லை என்ற காரணம் காட்டி, அரசாங்கமே அதனை ஏற்று நடத்த முன்வந்தது; இந்தக் கொள்கையை எல்லா முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் வரவேற்றனர்.

இந்த நிறுவனம், மத்திய அரசாங்கத்திடம் செல்வாக்கு பெற்றுள்ள ஒரு தனி நபரின் கூட்டு நிறுவனங்களாகிய 'முந்திரா' நிறுவனத்தில் ரூ. 1·56 கோடி மதிப்புள்ள பங்குகளைப் பெற்றுக் கொண்டதாம். அதிலும், ஒரேநாளில், மக்களின நிதியிலிருந்து ரூ. 1·25 கோடி பங்குகளை ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் பெற்றுளளதாம். இது 1957-ல் நடைபெற்றுள்ளது. ஆனால், 'முந்திரா' நிறுவனத்தின் நிலை என்ன—தரப்படும் பணத்திற்குத் தக்க பாதுகாப்பு உண்டா என்று கருதவேண்டியது, நல்லாட்சி நடத்தத் தெரிந்திருப்பவர்களின் முக்கிய கடமையாக இருந்திருக்கவேண்டும். அதிலும், ஒரு தனி நபரின் நிறுவனத்திற்கு இவ்வளவு பெரிய தொகை அளிப்பது என்றால், அதில் எவருமே எச்சரிக்கையாகத்தான் இருந்திருப்பர்.

'முந்திரா' நிறுவனத்தின் ஒரு அமைப்பான ஆஸ்லர் ஒளிவிளக்கு தயாரிக்கும அமைபபு கடந்த 10 ஆண்டுகளில், பங்குதாரர்களுக்கு இலாபத்தைப் பகிர்ந்து அளித்ததில்லையாம; 1955 முதல் 'முந்திரா' நிறுவனம், ஆண்டு வரவு-செலவுக் கணக்கை வெளியிடவில்லையாம்.

கல்வி அறிவில்லாத உழவர்கூட நிலவளத்தைப் பற்றியும், தண்ணீர் வசதி பற்றியும், உரத்தின் தரத்தைப் பற்றியும், விதையின் சிறப்பைப் பற்றியும் ஆராய்வதை நாம காண்கிறோம். வீட்டிலுள்ள தாய்மார்கள்கூட தங்கள் வீட்டில் இருக்கும் பொருள்களைப் பிறரிடம் ஒப்படைப்பதில் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். ஆனால், 'நாட்டை ஆள நாங்கள்தான்' என்று பெருமை பேசிக்கொள்பவர்கள், மக்களின் நிதியை இவ்வாறு கையாண்டு வருவது கண்டு நாம் வேதனைப்படாமல் இருப்பதற்கில்லை; வெட்கப்படவேண்டியவர்கள் வேண்டுமானால், இதை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடலாம்.

இது, இந்தியப் பேரரசின் வரலாற்றில் முதல் சம்பவம் அல்ல; ஜீப் வண்டிகள் வாங்குவதில் ஊழல், உர பேர ஊழல், சர்க்கரைத் துறையில் மோசடி, இலஞ்ச ஊழல் போன்றவைகள், நிர்வாகத் திறமைக் குறைவின் காரணமாக ஏற்பட்டுள்ளன. ஆனால், 'திட்டத்தை நிறைவேற்றப் பணம் இல்லை; அரசாங்கம் சிக்கனத்தைக் கையாண்டு வருகிறது' என்றெல்லாம் பசப்பு மொழிகள் கூறுவது மட்டும் குறைந்தபாடில்லை.

இதைக்குறித்து, மக்கள்சபையில் கடுமையாகப் பேசியவர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த கடமையுணர்ச்சியுள்ளவர்கள் சிலர் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, மறைக்க முடியாத நிலையில் வெளிப்பட்டுள்ள ஒரு நற்சான்றாகவே இதை எண்ணவேண்டியுள்ளது.

இன்றைய ஆட்சியாளரின் போக்கு எந்த அளவுக்கு மோசமடைந்து, கீழ்த்தரமாக ஆட்சி நடத்தப்படுகிறது என்பதற்கு, ஆளும் கட்சியினரே கண்டிக்கத் துணிவது ஓர் எடுத்துக்காட்டாகும்.

'டெல்கோ' நிறுவனத்தின் மூலம் எவ்வாறு ஏழைகளின் பணம் பாழாக்கப்பட்டது என்பதை நாடறியச் செய்த திரு பெரோஸ் காந்திதான் இந்த ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் ஊழலையும் அம்பலமாக்கியுள்ளார்.

இந்தநிலையில், மன்னிக்கமுடியாத தவறைச் செய்துவிட்ட பொறுப்பை மத்திய நிதியமைச்சர் ஏற்றுக்கொண்டிருந்தால், அவரை, 'கண்ணியம் வாய்ந்த நாகரீக ஜனநாயகவாதி' என்று மக்கள் பாராட்டக்கூடும்; எதிர்காலம் சிறப்பாக அமையும் என்று எண்ணியிருக்கமுடியும்: ஆனால் அவர், 'மத்திய நிதி அமைச்சு இலாகாவுக்கும், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திற்கும் நேரடியாக அன்றாடத் தொடர்பு இலலை' என்று குறிப்பிட்டு, பொறுப்பைத் தட்டிக் கழித்துப் பேசியது ஏன் என்பது விளங்கவில்லை என்பதுடன், அவர் இந்த ஏற்பாட்டிற்கு உண்மையான காரணங்களை வெளியிடாததற்கு இப்போது அவர் பதவியில் இருப்பதுதான் காரணம் என்றும் எண்ண வேண்டியுள்ளது.

நிதி இலாகா, இன்று இவ்வளவு பெரிய தவறை தட்டிக் கழிப்பதற்கு வேறு நல்ல காரணம் இருப்பதாக மக்கள் கருதுவதற்கில்லை.

அதிலும், அரசாங்க பாங்கி, ரிசர்வ் பாங்கி, தேசியத் தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகிய அனைத்தும், இந்தியப் பேரரசின் அரவணைப்பும ஆதரவும் பெற்றுள்ள 'முந்திரா' நிறுவனத்திற்கு, முன்னரே கடன்தர மறுத்துவிட்டுள்ளன என்பது, நிதி அமைச்சருக்குத் தெரியாமல் இருந்திருக்கும என்று எவ்வாறு கருதமுடியும்? இவ்வளவு துணிவுடன், மக்களின் நிதியைப் பொறுப்பற்ற முறையில்—விளைவுகளை எண்ணிப் பார்க்காது, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம், ஒரு வடநாட்டு நிறுவனததிற்கு அளித்திருப்பதற்கு வேறு நியாயமான காரணத்தைக் கண்டறிவதற்கில்லை.

மக்களின் மதிப்பையும், நல்லெண்ணத்தையும்பெற மேலும் காலங்கடத்தாது, இதுகுறித்து உடனடி விசாரணைக்கு ஏற்பாடு செய்வதில் நிதி அமைச்சர் ஈடுபடுவார் என்று நம்புகிறோம். அதற்கிடையில், இப்படி மேலும் பல ஊழல்கள் அதிகரிக்காமல் தடுப்பதற்கு மத்திய அரசாங்கம், திட்டமிட்டு இனியேனும் செயலாற்றும் என்று எதிர்பார்க்கிறோம்.

அபாய அறிவிப்பு!

இரண்டாம் திட்ட நிலைபற்றி மத்திய அமைச்சர்

மதுரை, டிச 27—

'ஒரு விஷயத்தை மனதில் கொள்ளவேண்டும். தொழில் அபிவிருத்திக்குப் போதுமான வசதிகளும், நிபுணர்களும், காலமும் உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்; திட்டம் தீட்டிவிட்டதால் அதை உடனே செய்து முடித்துவிடமுடியாது; காலமும் சாதனமும், இயந்திரங்களும் பயிற்சி பெற்றவர்களும் தேவை"

என்று மத்திய அரசாங்க வர்த்தக அமைச்சர் மொரார்ஜி தேசாய், மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபையில் பேசுகையில் தெரிவித்தார்.

சோர்வை அகற்ற அமைச்சர் உபதேசம்!

திட்டம் நிறைவேறுவதில் அச்சம்

சென்னை, டிச. 27—

"திட்டங்களை நிறைவேற்றுவதில் சிறிது தயக்கம் காண்பித்தாலும்கூட நமது வளங்களை நாம வீணாக்கியவர்களாகிவிடுவோம்; அத்துடன், கிடைத்துள்ள வாய்ப்புகளையும் நாம் நழுவவிட்டவர்களாகிவிடுவோம்" என்று, இந்திய சர்க்கார் கூட்டுறவு அமைச்சர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் கூறியுள்ளார்.

"இப்பிரச்சினையில் நாம் தாமதமோ, அலட்சியமோ செய்துவிட நேர்ந்தால், நமது பிற்கால சந்ததி நம்மை ஒருபோதும் மன்னிக்காது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'சந்திர யுக'த்தில் மொழி உணர்ச்சி கூடாதாம்!

பந்த் 'உபதேசம்' செய்கிறார்

கர்னூல், டிச. 25—

இந்தியும்—பஞ்சாப் மொழியும் இரட்டை பிரிவுகளென்றும். ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்ளலாகாதென்றும், செயற்கைச் சந்திரன் யுகத்தில் மொழிப் பான்மைகொள்வது கூடாதென்றும் மத்திய உள்விவகார அமைச்சர் பந்த் கூறியுள்ளார்.

'இந்திக்குத் தனி மதிப்பு கூடாது'

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு தீர்மானம்

கல்கத்தா, டிச. 27—

கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில், 'எந்தக் குறிப்பிட்ட மொழிக்கும் மற்ற மொழிகளுக்குக் காட்டப்படாத மதிப்பு அளிக்கக் கூடாது' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு கிராக்கிப்படி உயர்வு

ரொக்கமாகத் தர சிபாரிசு

புதுடில்லி, டிச. 26—

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு 1957 ஜூலை முதல் நவம்பர் முடிய தரப்பட வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்ட ரூ. 5 கிராக்கிப்படி உயர்வை ரொக்கமாகவே தந்து விடும்படி ஊழியக் குழு சிபாரிசு செய்திருப்பதாக நிதி இலாகா குறிப்பு வெளியிட்டிருக்கிறது.

ஊழியக் குழு, முன்பு இந்தத் தொகையை தேசிய சேமிப்புப் பத்திரமாகத் தரும்படி சிபாரிசு செய்திருந்தது.

இப்படித் தருவது, சம்பளப் பட்டுவாடா சட்டத்திற்கு விரோதமானது என்பதை, சர்க்கார், குழுவுக்குச் சுட்டிக்காட்டியதின் பேரில், ரொக்கமாக அந்தத் தொகையைத் தருமாறு குழு சிபாரிசு செய்து விட்டதாகப் பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

ஆந்திர மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு.....

நகர அலவன்ஸ் உயர்வு

ஐதராபாத், டிச. 26—

ஆந்திரப் பிரதேச சர்க்கார், ஐதராபாத், செகந்திராபாத் ஆகிய இரட்டை நகரங்களில் பணிபுரியும் சர்க்கார் ஊழியர்களில் மாதம் ரூ 200-க்கு மேல் சம்பளம் பெறாதவர்களுக்கு கிராக்கிப்படியில் ரூ 6 உயர்வு தருவதென முடிவு செய்திருக்கிறார்கள்.

1958-ம் ஆண்டிலிருந்து இந்த உயர்வு கிடைக்கும் எனத் தெரிய வருகிறது.

மாநிலத் தலைநகரில் நாளும் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதை ஒட்டியே இந்த உயர்வு தரபபட்டிருப்பதாகவும், இதனால் சுமார் 35,000 ஊழியர்கள் பயனடைவர் என்றும் முதன்மந்திரி சஞ்சீவ ரெட்டி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர மந்திரி சபை

தெலிங்கானா பகுதிக்குப் பிரதிநிதித்துவம்

முதல்வர் சஞ்சீவி உறுதிமொழி

ஐதராபாத், டிச 26—

வரும் மே மாதத்தில் மேல் (சட்ட) சபை நிறுவப்பட்டவுடன் தனது மந்திரி சபை உறுப்பினர் எண்ணிக்கையை 15 ஆக உயர்த்தப் போவதாகவும், அப்போது தெலிங்கானா பகுதியிலிருந்து ஒருவர் மந்திரியாக்கப்படுவார் என்றும் ஆந்திர முதன்மந்திரி சஞ்சீவ ரெட்டி கூறியிருக்கிறார்.

"ஆந்திரப் பிரதேச மந்திரி சபையில், ஆந்திர—தெலிங்கானா பிரதேசங்களுக்கு ஆளுக்கு நாலு வீதத்தில் பிரதிநிதித்துவம் தருவது என்று சென்ற ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்டது; அதன்படி நாம் கண்ணியமாக நடந்துகொள்வோம்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்று ஆந்திராவைச் சேர்ந்த ஏ. பகவந்தராவ் என்பார் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். இவரைச் சேர்த்து ஆந்திரப் பிரதேச மந்திரி சபையில் 14 பேர் இருக்கின்றனர். இவர்களில் ஒன்பது பேர் ஆந்திரத்தையும், 5 பேர் தெலிங்கானாவையும் சேர்ந்தவர்கள்.

தேர்தல் வழக்குகள்

ஒரு விவரம்

புதுடில்லி, டிச. 27—

சென்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற 478 அபேட்சகர்களுக்கு எதிராக 472 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாம்.

மாநில சட்ட மன்றத்தைச் சேர்ந்த மனுக்கள் 418; மக்கள் சபையைச் சேர்ந்த மனுக்கள் 60.

காங்கிரஸ் அபேட்சகர்களைப் பற்றிய மனுக்கள் மட்டும் 216.

ஆலைத் தொழிலாளர் அவதியுறும் நிலை?

கொள்கையில் கோளாறு?

அகமதாபாத், டிச. 26—

"துணி ஆலைகள், சணல் தொழிற்சாலைகளின் ஒருசில பிரிவுகள் மூடப்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டமும், விலையுயர்வும் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது" என்று இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தலைவர் எச்சரித்துள்ளார்.

மேலும் இம்மாதிரி நடைபெறுமானால் 10,000 முதல் 15,000 பேர் வேலையிழப்பர் என்றும், இதனால் $1\frac{1}{2}$-இலட்சம் பேருக்கு மேல் திண்டாட வேண்டிய நிலை ஏற்படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலை உருவாவது திட்டத்திலும், சர்க்கார் கொள்கையிலும் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதையே காட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் துணி உற்பத்தி குறைந்து, விலைகள் உயரும் அபாயம ஏற்படக்கூடுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நெருக்கடியைத் தவிர்க்க புதியதோர் யோசனை

துணி கையிருப்பு மிகுந்துவிட்ட காரணத்தினால் ஆலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தவிர்ப்பதற்காக மத்திய அரசாங்கம் ஆலை பாங்கி ஒன்றை நிறுவவேண்டும் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

★

மூடப்படும் பஞ்சாலைகள்

சர்க்கார் ஏற்கக் கோரிக்கை

பம்பாய், டிச. 26—

மூடப்பட்ட பஞ்சாலைகளையும், மூடப்போவதாகக் கூறப்படும் பஞ்சாலைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதுபற்றிப் பரிசீலனை செய்யவேண்டும் என்று, ஜி. டி. அம்பேகர் என்பார் கூறியுள்ளார்.

பருத்தி ஆலைத் தொழிலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஆலை அதிபர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித வரலாற்றில் அறியாத இரகசியம்

வானமண்டலம்பற்றி அறிய முடிந்ததாம்

மாஸ்கோ, டிச. 27—

அடுத்த 10 ஆண்டுகளுக்குள், சந்திரமண்டலத்திற்கும், சூரிய மண்டலத்திற்கும், மனிதன் செல்லமுடியும் என்று சோவியத் 'ராக்கெட்' நிபுணர் தெரிவித்துள்ளார்.

இதற்கான இயந்திர சாதனங்கள் இப்போதே இருக்கின்றன என்றும், வானமண்டலம்பற்றி மனித வரலாற்றில் இதுவரையில் அறியாத பல இரகசியங்களை அறியும் வாய்ப்பு கடந்த சில வாரங்களில் ஏற்பட்டதென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உலக நீதிமன்றம் இயங்கும் நிலை!

பம்பாய், டிச. 26—

"உலக நீதிமன்றத்தில் அதிகமாக வேலை இல்லை; சென்ற ஆண்டில் இரண்டு வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளன; கடந்த 11 ஆண்டுகளில் 30 வழக்குகள் மட்டுமே இம்மன்றத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளன; உலக நீதிமன்றத்தின் நீதிபதி வேலை 'சாரட் வண்டி' சவாரிபோல் சுகமாக அமைந்துள்ளது"

என்று, இந்தியாவுக்கும்—போர்ச்சுக்கலுக்கும் ஏற்பட்ட தகராறில் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்ட எம். சி. சக்ளா தெரிவித்துள்ளார்.

மக்கள் வறுமை நீங்கவில்லை; மந்திரிகளுக்கு உல்லாச வாழ்வா?

காங்கிரசார் ஆதித்திராவிடர்களுக்கு செய்த நன்மை என்ன?

சென்னை சேப்பாக்கத்தில் மு. கருணாநிதி கேள்வி

சென்னை சேப்பாக்கம் லாக் நகரில் 5—12—57ல் நடைபெற்ற சாமி படிப்பகப் போதுக்கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

"தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புகலிடம்—உரிமையுள்ள இடம் காங்கிரஸ்தான் என்று காங்கிரஸ்காரர்கள் பறைசாற்றி வருகிறார்கள். உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் ஓரளவு சுகம் அனுபவித்துவருவார்களேயானால் அது யாரால் ஏற்பட்டது என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

"இன்று சட்டசபையில் 10-15 ஆதித் திராவிட எம்.எல்.ஏ.-க்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்றால், அவர்களெல்லாம் யார் காட்டிய தயவால்—யாருடைய கொள்கையின் பயனால் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

"தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி வாங்கித் தந்தது யார்? அது வேண்டாம் என்று உண்ணாவிரதமிருந்தது யார்? தேவையில்லை; அப்படித் தனியாகப் பிரித்துவைப்பது குறுகிய நோக்கம் என்று சொன்னது யார் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"தாழ்த்தப்பட்ட மக்களை மேலும் தாழ்த்திவைக்க வேண்டும் என்ற கொள்கையுடன்தான் காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள். தனித் தொகுதி ஏற்பட்டதற்குக் காரணம் டாக்டர் அம்பேத்கார்தான். யாரோ மூட்டிய நெருப்பில் குளிர் காய்பவர்கள், நெருப்பு மூட்டியவர்களையே கிண்டல் செய்கிறார்கள்.

"அதிகமாக எதிர்க்கட்சிகளைத் திட்டுபவர்கள் காங்கிரஸ் 'அரிஜன்'கள்தான். ஆதித் திராவிடரை 'அரிஜன்' என்பது காங்கிரசார் பாஷை. ஆதித் திராவிட உறுப்பினர்கள்தான் வசைமாரி பொழிவதிலே மிக உச்ச நிலையிலே இருக்கிறார்கள். அம்பேத்கார் மூட்டிய தீயிலே குளிர் காய்பவர்கள் சொல்லுகிறார்கள் — 'தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்துக்குக் காரணம் சாந்தி, நேரு, கக்கன், சுப்பிரமணியம் ஆகியவர்கள்தான்' என்று! அவர்களைத் தோத்திரம் செய்கிறார்கள், காங்கிரஸ் தயவால், ஓர் அணு நன்மையும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

"சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்துப் பரவிய அந்தக் காலத்தில் நீடாமங்கலத்தில் ஓர் காங்கிரஸ் மாநாடு நடந்தது; அதில் 10 ஆதித் திராவிடர்கள் கலந்துகொண்டு எல்லோருடனும் சமமாக உட்கார்ந்து சாப்பிட்ட காரணத்துக்காக அவர்களை மொட்டையடித்து, தூணிலே கட்டிவைத்து அடித்து விரட்டியடித்தார்கள்! 'சாதியில்லை' என்று தம்பட்டமடித்துவரும் இதே காங்கிரஸ்காரர்கள்தான் அதைச் செய்தார்கள்! பறையன், பள்ளன் என்று தள்ளிவைக்கப்பட்டுள்ள அன்பிற்குரிய ஆதித் திராவிட மக்கள் இந்தக் கதிக்கு ஆளானார்கள்! 'அடே, பள்ளு பறைகளே! சம பந்தி போஜனம் என்றால் மேல் சாதிக்காரர்களுக்கு மட்டும்தானே தவிர, உங்களுக்கல்லவே' என்று [illegible] அடித்திருக்கிறார்கள்!

"மனிதன் மானத்தோடு வாழ வேண்டும் என்ற நோக்கமுடைய சுய மரியாதை இயக்கத்தினராகிய நாம், 'பள்ளன், பறையன் என்ற பெயரை ஏற்காதே; கடவுளின் பெயராலே 'அரிஜன்' என்ற பெயரைச் சூட்டுகிறார்கள்—அரிஜன் என்ற பெயரால் ஆண்டவனுக்கு அடிமைப்படுத்தப் பார்க்கிறார்கள்; எனவே, அந்தப் பெயரை ஏற்காதே! நீ இந்த நாட்டின் பூர்வ குடி; எனவே, ஆதித் திராவிடன் என்ற பெயர்தான் உனக்குப் பொருந்தும்' என்று நாம், பழங்குடித் தோழனைப் பார்த்துக் கூறினோம்.

"அமைச்சர் கக்கன், சட்டசபையிலே பேசும்போது, 'தாழ்த்தப்பட்ட மக்கள் இப்பொழுது நல்ல நிலைமையில் முன்னேறியிருக்கிறார்கள்; அவர்கள் வீடுகளிலே வெள்ளிப் பாத்திரத்தைப் பார்க்கிறோம்' என்று கூறினார். உண்மையிலேயே ஓட்டை உடைசல் செம்பு, பித்தளைப் பாத்திரங்களைத் தவிர வெள்ளிப் பாத்திரங்கள் யார் வீட்டிலே இருக்கின்றன? ஒரு சமயம், வெள்ளீயம் பூசிய தகர டப்பாக்களை வெள்ளிப் பாத்திரங்களாகவும், காவி பூசிய மண் சட்டிகளை பொன் சட்டிகளாகவும் அவர் நினைத்துக்கொண்டாரோ என்னவோ?

"இன்று யாருடைய வீட்டில் வெள்ளிப் பாத்திரத்தைப் பார்க்க முடிகிறது? வேண்டுமானால் மந்திரியான கக்கன் வீட்டில் வைரம் பதித்த தங்கப் பாத்திரத்தைக் கூடப் பார்க்கலாம்!

"தாழ்த்தப்பட்ட மக்களை ஆட்டுக்கடாயாக—பலிக்கடாவாக ஆக்கிக்கொண்டுள்ளார்களே தவிர, மற்றபடி யார் வீட்டில் இன்று தங்க மோதிரம் மின்னுகிறது?

"புதிதாகத் திருமணமான மணமகள் புருஷன் வீட்டுக்குப் போகும் நேரத்தில், தன் தந்தையைப் பார்த்து, 'அப்பா, பண்ணையாரிடம் பணம் கேட்டு வாங்கி ஒரு மூக்குத்தியாவது வாங்கிப் போட்டு என்னைப் புருஷன் வீட்டுக்கு அனுப்புங்கள் அப்பா' என்று கேட்க, 'பவுன் மூக்குத்திக்கு நான் எங்கேயம்மா போவேன்? பித்தளை மூக்குத்திகூட வாங்க என்னிடம் காசு இல்லையே' என்று சொல்லி 'வெறும் மூக்குடன் அனுப்பக்கூடாது' என்று கருதி, துடைப்பக் குச்சியை ஒடித்து மூக்கில் போட்டு அனுப்பிவைப்பான் தந்தை; இந்த நிலையைத்தான் நாம் பார்க்கிறோம்! கக்கன் இன்றைக்குச் சொல்லுகிறார்—வெள்ளிப் பாத்திரங்களும் தங்க நகைகளும் ஆதித் திராவிடர் வீட்டிலே இருப்பதாக!

"மதுரையிலே நான் கேள்விப்பட்டேன் ஒரு சங்கதி. கக்கன், தன் தந்தையின் அஸ்தியைக் கரைக்க இராமேசுவரம் போய்விட்டு சொந்த ஊருக்குத் திரும்பி காரில் சென்றுகொண்டிருந்த போது, சாலையிலே உள்ள ஒரு மரத்தின் கிளைகளை யாரோ வெட்டிக்கொண்டிருந்ததைக் கண்டாராம்; அவர்களை இவர் கூப்பிட்டு 'மரத்தை யார் வெட்டச் சொன்னார்கள்?' என்று கேட்க, 'எஞ்சினீயர்தான் வெட்டச் சொன்னார்' என்று அவர்கள் பதிலிறுக்க, உடனே அவர், 'வெட்டாதே, நிறுத்து' என்று சொல்ல, அதற்கு அவர்கள் 'நீ யார் எங்களை வெட்டாதே என்று சொல்லுவதற்கு?' என்று கூறியிருக்கிறார்கள்; அந்தத் தோழர்களுக்கு அவரை மந்திரி என்று தெரியவில்லை.

"உடனே அவர், 'நான் மந்திரி; நான் சொல்லுகிறேன், நிறுத்து' என்று சொல்லியிருக்கிறார்; அப்படியும் அவர்கள் நிறுத்தவில்லை; 'எங்களுக்கு சீப் எஞ்சினீயர் வெட்ட உத்தரவு போட்டிருக்கிறார்; நீங்கள் வெட்ட வேண்டாம் என்கிறீர்கள்; நாங்கள் யார் சொல்வதைக் கேட்பது?' என்று கேட்டிருக்கிறார்கள்; அதன் பிறகு அவர், சீப்-எஞ்சினீயரைத் தன்னை வந்து பார்க்கும்படி சொல்லியனுப்பினாராம்; ஆனால், சீப்-எஞ்சினீயரோ 'நான் பார்க்க வேண்டிய இடத்தில் பார்த்துக்கொள்கிறேன்; இப்பொழுது சென்று அவரைப் பார்க்கத் தேவையில்லை' என்று கூறிவிட்டாராம். இந்தச் செய்தியை மதுரைத் தோழர் எஸ். முத்து கூறினார்.

"அமைச்சர் கக்கன் அவர்கள் மிக அறிவாளி; காரணத்தோடுதான் அவர், 'மரத்தை வெட்ட வேண்டாம்' என்று சொல்லியிருக்கிறார் என்று நான் பிறகு முடிவுக்கு வந்தேன்.

"நாட்டில் பசி, பட்டினியால் மக்கள் வாடுகிறார்கள். பம்பாயில் சென்ற ஆண்டு 1,500 பேர் தற்கொலை செய்துகொண்டதாக மந்திரி சொன்னார். அவர்களெல்லாம் தூக்கிட்டுக்கொள்ள இடம் வேண்டாமா? அதற்குத்தான் 'மரத்தை வெட்ட வேண்டாம்' என்று அவர் சொன்னார் போலும்!

"ஒட்டுமொத்தமாக — கூட்டாக நாட்டு மக்களின் நலத்திலே அக்கறை இருக்கிறதா இந்தக் காங்கிரசுக்காரர்களுக்கு என்று கேட்கிறேன்.

"சாதாரண சம்பளமா வாங்குகிறார்கள் மந்திரிகள்? 'மாதம் ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடாது' என்று காராச்சி காங்கிரசு மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது; 'இந்தியாவுக்குச் சுதந்தரம் வந்தால்—வெள்ளைக்காரன் வெளியேறினால், 500 ரூபாய்க்குமேல் எவருக்கும் சம்பளம் கிடையாது' எனத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். வெள்ளையன் வெளியேறிவிட்டான்; சுதந்தர ஆட்சியில்தான் நம் மந்திரிகள் மாதம் ரூ. 1,500 வாங்குகிறார்கள்—சுளை சுளையாக—முள்ளங்கிப் பத்தை போல!

"மாணிக்கவேலர் வாங்கட்டும்—பெரிய குடும்பம் உள்ளவர்; சுப்பிரமணியம் வாங்கட்டும்—அவர் கலப்பு மணம் பண்ணிக்கொண்டவர்; குடும்பஸ்தர்; காமராசரும் வாங்குகிறாரே 1,500 ரூபாய்!

"மந்திரி வெளியூர் போனால், பிரயாணப்படியாக வேறு பணம் தரப்படுகிறது. மந்திரியின் கார் 1 மைல் நகர்ந்தால் 9 அணா கொடுக்கப்படுகிறது. காலையில் சென்னையிலிருந்து காரில் புறப்பட்டால் மாலையில் நாகர்கோயில் வரை போகலாம். சென்னைக்கும்—நாகர்கோயிலுக்குமிடையே 400 மைல் என்றால், மைலுக்கு 9 அணா வீதம் ரூ. 250 ஆகிறது.

"நான் காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறேன் — ஆத்திரத்தோடு அல்ல; ஆவேசத்தோடு அல்ல; சாதாரணமாகவே கேட்கிறேன்—காருக்கு ஒரு நாளைக்கு பெட்ரோலுக்கு 150 ரூபாயா ஆகும்? அப்படியே இருக்கட்டும்; மிச்சம் ரூ. 100 இருக்கிறதே, அது எதற்கு? 'வயிறு இருக்கிறதே, சாப்பிட வேண்டாமா?' என்பார்கள். அப்படி என்ன சாப்பிடுகிறார்கள் மந்திரிகள்—100 ரூபாய் அளவுக்கு?

"மந்திரிகள் அதிகச் சம்பளம் வாங்குவது பற்றி அகில இந்திய காங்கிரசுக் கட்சியிலேயே ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது; '1,000 ரூபாய்தான் எவரும் சம்பளம் வாங்கலாம்' என்ற தீர்மானத்துக்கு காங்கிரசுக் கட்சியிலேயே மெஜாரிட்டி கிடைத்துவிட்டது. உடனே நேரு தலையிட்டு மடக்கிப் பேசும்போது சொன்னார்—'நான் வாங்கும் சம்பளம், வருமான வரியெல்லாம் போக ரூ.1600-தான்; இதில் என் செலவு கட்டுப்படியாகவில்லை; ரூ. 900 தோட்டக்காரன் செலவு போக மிச்சம் ரூ. 700-தான் எடுத்துக்கொள்கிறேன்' என்று சொல்லி, வியாக்கியானம் செய்திருக்கிறார்.

"நேருவின் தோட்டக்காரனுக்கு என்ன வேலையென்றால், பூச்செடிகளை தோட்டத்திலே வளர்த்து, அங்கு மலர்கின்ற அழகிய ரோஜா மலரை நேருவின் சட்டைப் பையிலே தினம் ஒன்றாகச் சொருகிவிடுவதுதான்! இங்குள்ள தோட்டக்காரர்கள் நினைப்பார்கள் — 'பிறந்தாலும் நேரு வீட்டுத் தோட்டக்காரனாக அல்லவா பிறக்க வேண்டும்'— என்று! இன்னும் கவர்னர் சம்பளத்தைப் பற்றித்தான் சொல்ல வேண்டியதில்லையே! இப்படிக் கொள்ளைச் சம்பளம் வாங்கும் கவர்னர்களெல்லாம், ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளத்தைப்பற்றி—போலீஸ்காரர்கள் சம்பளத்தைப் பற்றி—என். ஜி. ஓ.-க்கள் சம்பளத்தைப்பற்றி அக்கறை காட்டினார்களா என்றால், இல்லை. இவர்கள்தான் ஆதித் திராவிடர்களின் வீடுகளிலே வெள்ளிச் சாமான்கள் மின்னுவதாகக் கூறிப் புளகாங்கிதமடைகிறார்கள்!

"மந்திரிகளை வேண்டுமானால் மகுடபதிகளெல்லாம் வாழ்த்தி வரவேற்கலாம். ஒரு மந்திரிக்கும், ஒரு சாதாரண தொழிலாளிக்கும், ஒரு ஆரம்ப ஆசிரியர் வேலைக்கும் தரத்திலே வேறுபாடு இருக்கலாம்; ஆனால் எல்லோருக்கும் வயிறு ஒன்றுதான்; வாழ்க்கைத்தரமும் ஒன்றுதான்; இவர்களிடையே ஏன் இவ்வளவு வித்தியாசத்தைப் பார்க்கிறோம்?

"ஆரம்ப ஆசிரியர்கள் ரூ. 5—10 சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்டால்—கூப்பாடு போட்டால் அதைக் கவனிக்க இவர்களால் முடியவில்லை. ஆரம்ப ஆசிரியர்வீட்டு அடுப்பிலே பூனைக்குட்டி தூங்குகிற நிலைமை—மாதத்திலே 20 நாள் சாப்பிட்டிருக்க மாட்டார்; இந்த நிலையில், அவர் வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்பது எங்ஙனம் முடியும்?"

சாதியின் பேரால்

வாணிபம் நடத்த அனுமதியில்லை

சூரமங்கலம் பஞ்சாயத்து தீர்மானம்

சேலம், டிச. 26—

"பஞ்சாயத்து எல்லைக்குள் பொது மக்கள் நன்மையைக் கருதி, சாதியின் பெயரால் உயர்வு—தாழ்வு என்பதை ஒழிக்கும் பொருட்டு, சாதி, மதங்களின் பேரால் நடத்தப்படும் தொழிலுக்கோ, வாணிபத்திற்கோ, விளம்பரத்திற்கோ அனுமதி (லைசென்சு) அளிக்கப்படக் கூடாது"

என உறுப்பினர் ஏ. கோவிந்தசாமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சூரமங்கலம் பஞ்சாயத்தின் 26—12—57 கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தோழர்கள் கவனத்திற்கு :

★

'நம் நாடு' அலுவலகத்திற்கும், தலைமை நிலையத்திற்கும் வரக்கூடிய 'கவர்'களைப் பிரிக்கும் போது உள்ளேயிருக்கும் கடிதங்களும், செக்குகளும், டிராப்ட்டுகளும் கவரோடு சேர்ந்தொட்டிக்கொள்கின்றன. அப்படி ஏற்படுவதால் கடிதங்களும், 'செக்' 'டிராப்ட்'டுகளும் கிழிந்துபோக நேரிடுகின்றன.

எனவே, கவர்கள் அனுப்பக்கூடிய 'நம் நாடு' சந்தாதாரர்களும், ஏஜெண்டுகளும், மற்ற தோழர்களும், மற்றும் தலைமை நிலையத்திற்கு உறுப்பினர் சீட்டுகளும், கடிதங்களும் அனுப்பக்கூடிய எல்லாத் தோழர்களும் கவர்களின் ஓரத்தில், முன்பே பசை தடவப்பட்டுள்ள குறிப்பிட்ட இடத்திலேயே பசையைத் தடவி ஒட்டி அனுப்புமாறு தெரிவித்துக்கொள்கிறோம்.

—நிர்வாகி : 'நம் நாடு'

கைத்தறித் துணி

'ரிபேட்' குறைப்புக்கு எதிர்ப்பு

நாகர்கோவில், டிச. 23—

"கைத்தறித் துணிகளுக்கு அரசாங்கம் கொடுத்துவந்த கழிவு (ரிபேட்) தொகையை 9 புதுக் காசிலிருந்து 6 புதுக் காசாகக் குறைத்துவிட்டதால் கைத்தறித் தொழிலும், கைத்தறி நெசவாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு இக்குழு மிகவும் வருந்துகிறது; எனவே, கைத்தறித் துணியின் வளர்ச்சிக்கும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யவும் 'ரிபேட்' தொகையைத் திரும்பவும் 9 புதுக் காசாகக் கூட்டித் தரவேண்டுமென்று இந்திய அரசாங்கத்தை இக்குழு வேண்டிக்கொள்கிறது"

என்று, நாகர்கோவில் வடசேரியைச் சேர்ந்த திருமலையான் கைத்தறி நெய்து விவசாயக் கூட்டுறவுச் சங்கச் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

★

வடசேரி முன்னேற்ற கைத்தறி நெசவாளர் சங்கத் தீர்மானம்

21—12—57 இரவு 8 மணிக்கு வடசேரி முன்னேற்றக் கைத்தறி நெசவுத் தொழிலாளர் (உற்பத்தி விற்பனை) கூட்டுறவு சங்க செயற்குழுக் கூட்டம் திரு. கே. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற போது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கைத்தறித் துணிகளுக்கு அரசாங்கத்திலிருந்து கொடுத்துவந்த 'ரிபேட்' தொகையை 9 புதுக் காசிலிருந்து 6 புதுக்காசாகக் குறைத்துவிட்டதால் கைத்தறித் தொழிலையும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களையும் பெரிதும் பாதித்திருப்பதைக் கண்டு இக்குழு மிகவும் வருந்துகிறது; எனவே, கைத்தறித் துணியின் வளர்ச்சிக்கும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யவும் 'ரிபேட்' தொகையை திருப்பவும் 9 புதுக்காசாக கூட்டித்தர வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தை இக்குழு வேண்டிக்கொள்கிறது.

★

மதுரை நெசவாளர் வேலைநிறுத்தம்

மதுரை, டிச. 26—

கைத்தறித் துணிக்குத் தரப்பட்ட தள்ளுபடியை (ரிபேட்) குறைத்ததற்காக மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து மதுரையில் 1,000 கைத்தறி நெசவாளர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர். மாலையில் ஊர்வலமாகச் சென்று திலகர் திடலில் கண்டனக் கூட்டம் நடத்தியுள்ளனர்.

ஏ. அருணாசலம் உரிமை முழக்கம்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதிகாரங்களையெல்லாம் தம்மிடம் குவித்துக்கொண்டு நம்மை அடக்கி ஆள்கிறது, டெல்லி! மக்களின் வாழ்வுக்குஅடிப்படைத் தேவையான உணவு. உடை, குடியிருக்க வீடு, தொழில் வசதி, கல்வி இவைகளை மக்களுக்கு அளிக்காத சர்க்காரை மக்களாட்சி நடத்துவதாக எப்படிக் கூறமுடியும்? தனியாக—சிறப்பாக வாழ விரும்புகிறோம் என்றால், சீறுகிறது டெல்லி!

"மாநில அரசாங்கத்திற்குப் பிச்சை அளிப்பதுபோல் சிறு சிறு கவளங்களை அளித்து ஆசை காட்டிவிட்டு, மத்திய அரசாங்கம் அதிகாரங்களை யெல்லாம் தன்னிடத்தில் குவித்துக்கொள்ளும் கேவலமான முறை வளர்ந்து வருகிறது......இப்படி அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படும் முறையையும் போக்கையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று எந்த அரசியல் கட்சியிலும் சார்பற்றவரும், ஐதராபாத் பிரச்சினையை விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு டெல்லி சர்க்காரால் அனுப்பப்பட்டவருமான டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள் காஞ்சியில் பேசியதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"இந்திய யூனியன் ஆட்சிப் பொறுப்பு தங்களிடம் இருக்கும் காரணத்தால் வடநாட்டினர், அட்டைபோல் ஒட்டிக்கொண்டு தென்னாட்டவரின் குருதியை உறிஞ்சுகிறார்கள். ஆகவே, தென்னகத்தார் பல பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அவைகளில் மிக முக்கியமான உணவு, தொழில், கல்வி ஆகிய மூன்று பிரச்சினைகளை உங்களிடம் விவாதிக்க விரும்புகிறேன்.

"உணவுப் பிரச்சினை தான் இன்று முக்கியமானதும் முதன்மையானதுமா யிருக்கிறது. உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டு, அணைக்கட்டுகள் கட்டுவதற்கும், புஞ்சை நிலங்களை நஞ்சைநிலங்களாகுவதற்கும் 2,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டது, மத்திய சர்க்காரால்! 'திட்டகாலம் முடிவடைந்தபின்னும் உணவுப் பற்றாக்குறை என்?'—என்று கேட்டால், 'நாட்டில் காலமழை பெய்யாததால் விளைவு இல்லை; அடுத்த ஆண்டில் சரியாகிவிடும்' என்கின்றனர். 'அடுத்த ஆண்டும் பற்றாக்குறையிருக்கிறதே' என்று காரணங் கேட்டால், 'மக்கள் தொகை அதிகமாகிவிட்டது' என்கின்றனர். பற்றாக்குறையைச் சரிக்கட்ட 'குடும்பக் கட்டுப்பாடு' பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர், இப்பொழுது!

"'அரிசி கிடைக்காவிடில், தமிழர்களே! பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள்' என்று முன்னாள் உணவு அமைச்சர் முன்ஷி கூறியது உங்களுக்கெல்லாம நினைவிருக்கலாம்.

"அமெரிக்கா, கானடா போன்ற நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு தங்களுக்கு வேண்டிய கோதுமையை வரவழைத்துக் கொள்கின்றனர் வடவர்; அவர்களுக்கு மாற்றுணவு சிபாரிசு செய்யப்படவில்லை. அரிசி சாப்பிடும் தென்னாட்டு மக்களுக்கு, கோதுமை மாற்று உணவாக சிபாரிசு செய்யப்படுகிறது. அரை உணவுக்கு வழியில்லை; 'அதையும் குறையுங்கள்' என்கிறார் நேரு பண்டிதர். கடைசியாக வந்த செய்தி கூறுகிறது—6 மாதத்திற்கு அரிசியே கிடையாதாம்! கோதுமையே சாப்பிட வேண்டுமாம்!

"உணவுப் பற்றாக்குறை மாகாணமாகிய கேரளததை மத்திய அரசாங்கம் கோடியாகக் கவனித்துக்கொள்ள வேண்டுமென சென்னை கோரியது; மத்திய சர்க்கார் இணங்கவில்லை! ஆந்திர அரிசி தமிழ்நாட்டுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யக் கோரினார்கள்; டில்லி நிராகரித்தது! அக்டோபர் முதல், மத்திய அரசு அளித்துவந்த அரிசியும் நிறுத்தப்பட்டது.

"மொழிப் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, தொழிற் பிரச்சினை, கல்விப் பிரச்சினை முதலிய சகல பிரச்சினைகளையும் தனது அதிகாரத்தில் வைத்துக்கொண்டிருக்கும் மத்திய சர்க்கார், தென்மண்டல உணவுகுழு ஒன்றை ஏற்படுத்தி, 'மண்டலத்திற்குள் உற்பத்தியாகும் உணவு, மண்டலத்துக்கு வெளியே போகாது; இனிமேல் உங்கள் தேவைகளை நீங்களே சரிக்கட்டிக்கொள்ளுங்கள்' என்று கூறுகிறது. உணவுப் பிரச்சினையை மட்டும் நாமே சரிக்கட்டிக்கொள்ளும்படி சொல்லும் டில்லியைக் கேட்கிறோம்—'தனி நாடு தந்துவிட்டால் எங்களுடைய சகல பிரச்சினைகளையும் நாங்களே சரிக்கட்டிக்கொள்கிறோம்'—என்று!

"தென்னகத்தின் வறுமைக்குக் காரணம், இங்கு தொழில் வளம் பெருகாதது தான். தென்னகத்திற்குத் தேவையான திட்டங்கள் தீட்டப்படவில்லை; தீட்டிய திட்டங்கள் நிறைவேற்றப் படவுமில்லை; மாறாக ஒவ்வொரு திட்டமாகக் கைவிடப்படுகிறது.

"உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் பாக்சைட்டை உபயோகப்படுத்தி மேட்டூர் பகுதியில் ஓர் அலுமினியத் தொழிற்சாலை நிறுவப் படுமென்று அறிவிக்கப்பட்டது, தேர்தல் நேரத்தில்! இப்பொழுது நிதி வசதிக் குறைவெனக் காரணங்காட்டி அது கைவிடப் படுகிறது. உண்மைக் காரணம், நிதி வசதிக் காரணமல்ல; பீகாரிலும், வங்கத்திலும் இயங்கும் அலுமினியத் தொழிற்சாலை பாதிக்கப்படும் என்பதே!

"மேலும், சேலம் தேனிரும்புத் தொழிற்சாலையும், மேட்டூர் காகித உற்பத்தித் தொழிற்சாலையும் கைவிடப்படுகின்றன.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அமெரிக்கா ரூ. 150 கோடி நிதியுதவி அளிகக முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. நேர்மையான சர்க்காரா யிருந்தால், 'நிதி வசதிக் குறைவு' காரணங் காட்டி, கைவிடப்பட்ட தென்னாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

"எரிபொருள் கிடைக்காததால் தென்னாடு தொழிற்துறையில் முன்னேற முடியவில்லையென்று காரணம் காட்டப்படுகிறது. 'இதோ, நெய்வேலியில் நிலக்கரி கிடைக்கிறதே! இனி இங்கு தடையின்றித் தொழிற்சாலைகள் நிறுவலாமல்லவா?'—என்று கேட்டபின், 'அந்த நிலக்கரி தரக்குறைவானது' எனத் தட்டிக்கழித்தது, டெல்லி! அந்நிய நாடுகளுக்கு இந்த நிலக்கரி ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டது. மிக உயர்ந்த ரகமாயில்லாவிடினும், பல தொழில்களுக்கு இதை உபயோகிக்கலாமென அந்நியநாட்டு நிபுணர்கள் கருத்தறிவித்தனர். இவ்வளவு முயற்சிக்கும், வற்புறுத்தலுக்கும் பிறகுதான் நெய்வேலித் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதையொட்டி ஒரு மின்சார உற்பத்திச்சாலையும், செயற்கை உர உற்பத்தித் தொழிற்சாலையும் கட்டத் திட்டமிடப்பட்டது. நிலக்கரி தோண்டும் வேலையையும் பண்டித நேரு சென்ற ஆண்டில் துவக்கி வைத்தார்; ஆனால், சுரங்க வேலைகள் துரிதமாகவோ, அக்கறையாகவோ நடத்தப்படவில்லை. அது மட்டுமல்ல; அந்நிய செலாவணித்தட்டு என்ற காரணம் காட்டி, நெய்வேலித் திட்டமும், உரத்தொழிற்சாலையும் கைவிடப்படுமெனத் தெரிகிறது.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் ஆகிய மூன்று இடங்களிலும் பெரிய உருக்குத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூர்கேலா தொழிற்சாலைக்கு மட்டும் ரூ. 97 கோடியாம்.

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேலம் உருக்குத் தொழிற்சாலை சேர்க்கப்படுமென நம்பவும் வழியில்லை. அடுத்த பெரிய இரும்புத் தொழிற்சாலை பீகாரில் அமையுமாம்!

"வேறு தொழில்கள் இல்லாத நிலையில் பல இலட்சக்கணக்கான மக்களுக்கு இன்று வாழ்வளித்து வருவது நெசவுத் தொழில், சுமார் 5 ஆண்டுகளுக்குமுன் நூல் கிடைக்காத காரணத்தால் இலட்சக்கணக்கானவர்கள் வேலையிழந்து, தெருத்தெருவாக—குடும்பம் குடும்பமாகப் பிச்சையெடுத்து அலைந்தது உங்களுக்குத் தெரியும். சர்க்கார் கஞ்சித் தொட்டிகள் அமைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நெசவாளர் துயர் துடைக்க தி. மு. கழக தலைவர்கள் தெருத் தெருவாய் அலைந்து கைத்தறி ஆடைகளை விற்பனை செய்து நெசவாளருக்கு உதவி செய்தனர்.

"நெசவாளர் துயர் களைய கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு, கைத்தறித் துணிகளை மக்கள் விரும்பி வாங்க வேண்டுமென்பதற்காக ரூபாய்க்கு ஒன்றரை அணா விற்பனை விலைக் கழிவு சர்க்காரால் கொடுக்கப்பட்டது. அரசாங்கம் கொடுத்து வந்த விற்பனைக் கழிவு டிசம்பர் திங்கள் முதல் ஒரு அணாவாகக் குறைக்கப்படுமென்றும், இன்னும் ஓராண்டு காலத்திற்குள் விற்பனை விலைக்கழிவு முழுவதும் நிறுத்தப் படுமென்றும் மத்திய அமைச்சர் நித்தியானந்த கனுங்கோ அறிவித்துள்ளார்.

"எந்த நோக்கத்தோடு விற்பனை விலைக்கழிவு ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் வெற்றியடையுமுன் கழித் தொகையைக் குறைப்பதோ, அல்லது முற்றிலும் மறுப்பதோ நீதியும் அல்ல—நேர்மையுமல்ல! நெசவாளர்கள் பெரும்பாலும் தென்னவராயிருக்கும் காரணத்தால்தான் அரசாங்கம் நெசவுத் தொழிலைப் புறக்கணிக்கிறது.

(மேலும் வரும்)

30 அல்ஜீரிய வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

அல்ஜீரியா, டிச. 28—

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட அல்ஜீரிய மக்கள் நடத்தி வரும் போராட்டத்தில் நேற்று 50 வீரர்களை பிரெஞ்சு இராணுவம் சுட்டுக் குவித்துவிட்டதாம.

கோலார் தங்கவயல்

டெல்லியிடம் மைசூர் அரசாங்கம் வற்புறுத்தல்

பெங்களூர், டிச. 27—

தேசிய மயமாக்கப்பட்டுள்ள கோலார் தங்கவயலை அபிவிருத்தி செய்ய ரூ. 303 இலட்சம் செலவிற்கான ஒரு திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு மைசூர் சர்க்கார், மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளதாம.

இந்தியாவின் உதவி

3 'டகோடா' விமானங்களையும், 2 'ஹெலிகாப்டர்' விமானங்களையும் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு அனுப்பியுள்ளது; அவைகளில் மருந்துகள், கம்பளங்கள், உணவுப் பார்சல்கள் ஆகியவை உள்ளன.

கழகக் கூட்டம்

புதூர்பாளையம் :
பிள்ளையார் கோவில் முன்பு
30—12—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : பி. ரேத்தினம்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
அன்பில்-தருமலிங்கம்
அ. தம்புசாமி, செங்குட்டுவன்
கே. கந்தசாமி

'மதுரை வீரன்' படக்காட்சி

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

சூளை, நகர இளைஞர் கழக உதவி நிதிக்காக 29—12—57 காலை 10 மணிக்கு, சென்னை—பெரம்பூர் பாரக்ஸ், லட்சுமி திரையரங்கில் எம். ஜி. ஆர்., கலைவாணர் என். எஸ். கே. முதலியோர் நடித்த 'மதுரை வீரன்' படக்காட்சி நடைபெறும்.

ஆமதாபாத் மாவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

1—1—58 மாலை 3-மணிக்கு ஆமதாபாத் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறும். எல்லா மாவட்ட உறுப்பினர்களும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இலவசப் பால் விநியோகம்

29—12—57 காலை 9-மணியளவில், சென்னை 8-வதுவட்ட மக்கள் மன்றப் பணிமனையில் (எண் 17, திருப்பள்ளித் தெரு, பெத்துநாய்க்கன் பேட்டை), வழக்கறிஞர் எம். அனந்தாராமன் தலைமையில் இலவசமாகப் பால் விநியோகிக்கப்படும்.

மொழிப்பிரச்சினை குறித்து

சி. ஆர்., சி. பி. ஆர். பேசுவர்.

29—12—57 மாலை 6-மணிக்கு, சென்னை-மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில், மொழிப் பிரச்சினை என்ற பொருள் குறித்து, திருவாளர்கள் சி இராசகோபாலாச்சாரியார், சி. பி இராமசாமி ஐயர் ஆகியோர் பேசுவர்.

சாகத் துணிந்தவனின் சோகக் கதை!

கல்கத்தா, டிச 28—

32 வயது நிரம்பிய எம. மரிதா என்பவன், 5 பேர் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புள்ளவன்; வேலை தேடி பல இடங்களிலும் அலைந்தும் வேலை கிடைக்கவில்லை. பிணியால் பீடிக்கப்பட்டானும்.

மேலும் அவன் நிலை மோசமாகிவிடவே, வாழ விரும்பாமல் உயிரை மாய்த்துக்கொள்ளமுடிவு செய்தானும்; இருந்தும் அவன் சாகவில்லை.

தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக இப்போது நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டிருக்கிறான்.

இந்த வாலிபன், ஆசியாவின் ஜோதி—முடி சூடா மன்னர் பண்டித நேரு, காரில் பவனி வரும்போது அந்தக் கார்முன் விழுந்து சாகத் துணிந்துள்ளான்

அவனுடைய சோகக் கதை நீதிமன்றத்தில் வெளியாகியுள்ளது. விசாரணை மீண்டும சனவரி 10-ந் தேதி நடைபெறும்.

கிருஸ்துமஸ் விழாவன்று படுகொலைகள்

தென் ஆப்பிரிக்க நகரில் 25 ஆப்பிரிக்கர் உயிரிழந்தனர்

ஜோகன்ஸ்பர்க், டிச. 25—

கிருஸ்துமஸ் நாளன்று 20 ஆப்பிரிக்கர்கள் குத்திக்கொல்லப்பட்டதாகவும், நகரில் விழாவை ஒட்டி நடைபெற்ற கலவரங்களினால் 800 பேர்வரை காயம்பட்டனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

போர்ட் எலிசபெத் என்ற நகரில் நடைபெற்ற சண்டைகளிலும் 5 ஆப்பிரிக்கர்கள் கொல்லப்பட்டனராம்.

இளங்கோ கலை மன்றம் (அண்ணா கல்வி அகம்) செயற்குழு உறுப்பினர்களுக்கு :

29—12—57 காலை 9-மணிக்கு, மன்றப் பணிமனையில் (எண் 31, நாராயணப்ப நாய்க்கன் தோட்டம், 7-வது சந்து, வண்ணை) நடைபெறும் கூட்டத்தில், அண்ணா கல்வி அகமும், திராவிடர் திருநாளும்' என்பதுபற்றி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

என். எஸ். கே. தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினர்களுக்கு :

29-12-57 காலை 10-மணிக்கு, சென்னை 4-வது வட்ட மேற்படி மன்றப் பணிமனையில் (எண் 10, வைனியப்பன் தோட்டம், 3-வது சந்து, வண்ணை) மன்றப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 4-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு

29—12—57 காலை 9 மணிக்கு சென்னை 4-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண். 20/29, காளிங்கராயன் முதலி தெரு, வண்ணை), கழகச் செயற்குழுக்கூட்டம் நடைபெறும்.

சென்னை 5-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

29—12—57 காலை 9 மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் (எண். 2, தளசிங்க கிராமணித் தெரு, கொருக்குப்பேட்டை), கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, திராவிடர் திருநாள், வரவு-செலவு கணக்கு பரிசீலனை செய்யப்படும்.

சென்னை — இராயபுரம் சிங்காரவேலர் பகுத்தறிவு மன்ற உறுப்பினர்களுககு :

29—12—57 காலை 9-மணிக்கு, மன்றப் பணிமனையில் (73-பி, கிழக்கு மாதா கோயில் தெரு), மன்ற நிர்வாக உறுப்பினர்கள் கூடுதல் நடைபெறும்.

சென்னை 3-வது வட்ட தி. மு. க. அவசர செயற்குழுக் கூட்டம்

29—12—57 மாலை 7 மணிக்கு கழகப் பணிமனையில் (எண். 32, மணியக்காரர் சவுல்ட்ரி ரோடு, வண்ணை), செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, முக்கியப் பிரசசினை ஆய்வுக்கு எடுததுக் கொள்ளப்படும.

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

29-12-57 காலை 10-மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில பேராசிரியர் ம. இராச. மாணிக்கம் அவர்கள் திருக்குறளில் 'ஊழ்' என்ற அதிகாரத்தை விளக்குவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

29—12—57 இரவு 7 மணியளவில், சென்னை—தியாகராயநகர் மதிவளர் மன்றப் பணிமனையில், தோழர் ம. மோகன் தலைமையில், 'பொதுநலம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

29—12—57 மாலை 6 மணிக்கு சென்னை கோடம்பாக்கம், அறிவு வளர்ச்சி மன்றத்தில் கலைவாணர் நூல் நிலையச் செயலாளர் தலைமையில் தோழர்கள் சா. வில்லவன், ந. செயராமன், ஆ. ர. துரையரசன் ஆகியோர் 'தென்னாடும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும' என்பது பற்றிப் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.